

# பரலோக பொக்கிஷங்கள்

உங்கள் பொக்கிஷம் எங்கே?... அங்கே உங்கள் இருதயம்!

## ‘கழுதை’ பவனிவந்து ‘குதிரையை’ ஜெயித்திடும் கெம்பீரம்!


‘சீயோன் குமாரத்தி’ கர்த்தருக்கு உரியவள்! அவளோ, தாழ்மையும் சிறுமையுமானவள்! அவளுக்கு ஏற்படும் ‘கலக்கத்தை’ கர்த்தர் காண்பார்! உடனே அவளிடம் “இதோ, உன் ராஜா உன்னிடத்தில் வருகிறார்” என வருவார்! ஆகிலும் நமது ராஜா ‘கழுதையின் மேல்’ ஏறி வருவார். அதாவது, சீயோன் குமாரத்தியின் சிறுமையும், தாழ்ச்சியுமே, ராஜாவை அழைத்து வரச்செய்யும் ‘கழுதையாக’ குறிப்பிடப்பட்டிருக்கிறது! (சகரியா 9:9).

ஏனெனில், அடுத்த 10-ம் வசனத்தில், எதிராளியின் **‘குதிரைகளை’ அற்றுப்போகப்பண்ணுவேன்!** என ஆண்டவர் கூறினார்! எதிர்கொண்டு வந்த அகந்தையான ‘குதிரைகளால்’ கலங்கிய சீயோன் குமாரத்தி ஆறுதல் அடைந்தாள்! ஆ, இந்த இரட்சிப்பு பாக்கியமானது! ‘கழுதை’ எதிர்கொண்டு ‘குதிரையை’ ஜெயித்திடும் பாக்கியம்! சீயோன் குமாரத்தி களிகூர்ந்து, கெம்பீரிப்பதற்கு இனி என்ன தடை? அல்லேலூயா. _tr


பெட்டகம் 23

அக்டோபர் 2021

பரல்கள் 10



## கிறிஸ்துவுக்கு தியாக ஊழியர்களே தேவை!

ஒருவன், தன் முழுமையும் தேவனுக்கு கொடுக்காத பட்சத்தில் "நான் கொடுத்தேன்!" என எதையாவது வைத்துக் கூறுவதில் ஒரு பலனும் இருக்காது. அதுபோலவே 'தன் முழுமையும்' ஊழியத்திற்கு தியாகமாய் ஒப்புக்கொடாமல் "நான் ஊழியம் செய்தேன்" எனக்கூறுவதில் ஒரு பலனும் இருக்காது! சர்வவல்ல தேவனின் "சர்வவல்ல தன்மைக்கு".... யாதொருவரின் ஆதரவும் தேவையில்லை! ஆனால், இன்றைய 21-ம் நூற்றாண்டு கிறிஸ்தவமோ, தேவனையும் அவருடைய ஊழியத்தையும் பரிதாப நிலையில் வைத்திருக்கிறார்கள்! "என்ன செய்வது, தேவனுக்கு என்னுடைய ஊழியம் தேவையாய் இருக்கிறது!" என்ற மனநிலையில் தேவன்மீது பரிதாபம் கொண்டு ஊழியம் செய்கிறார்கள்.

இந்த தரம்குறைந்த ஊழியர்களில் தேவன் பிரியப்படுவாரோ? நிச்சயமாய் இல்லை! தேவனுடைய கண்கள், குழுமி நிற்கும் இந்த அரைகுறை ஊழியர் கூட்டத்தைப் பார்த்து"செம்மையான இருதயம் கொண்டவன் ஒருவனும் இல்லை!"என்றே புறக்கணித்துவிடுவார்! தேவன்ஒருக்காலும் "சோடையான" ஊழியர்களை விரும்பியதே இல்லை! தேவன் மனம் மகிழும் ஊழியம்... நன்றிப்பெருக்கோடு, "தங்கள் முழுமையும் கொண்டு" செய்திடும் ஊழியர்களே, அவரது இருதயத்தை மகிழச்செய்யும் ஊழியர்களாய் ஜொலித்திருப்பார்கள்!

*-Ed*

**2021 'பரலோக பொக்கிஷங்கள்' – வருட சந்தா ரூ.150.00**

*சந்தா புதுப்பிக்காதவர்கள் **அக்டோபர் 12-ம் தேதிக்குள்** அனுப்பி புதுப்பித்துக்கொள்ள அன்புடன் வேண்டுகிறோம். ஒரே விலாசத்தில் 3 பிரதிக்கு மேல் ஒரு பிரதி வீதம் ரூ.**125.00** அனுப்புங்கள். அயல்நாடு ஒரு பிரதி ரூ.**900/-** அனுப்ப வேண்டும்.*

**ஆவிக்குரிய விழிப்பூட்டும்! அனல் குன்றா வழிகாட்டும்!**
**அசல் உயர்த்தி போலி அகற்றும்!**
**சமரசம் மறுத்து சத்தியம் பேசும்! குருவின் அடிச்சுவடில் சீஷர்களை எழுப்பும்!**

வங்கி கணக்கு: **MADURAI CHRISTIAN FELLOWSHIP,** Indian Bank - Koodal Nagar Branch
A/c no: **502087685** Ifsc code: IDIB000K150
(வங்கியில் செலுத்தியபின், உங்கள் விலாசம் மற்றும் தகவல் தெரிவிக்கவும்)

கடித தொடர்பு : **PARALOGA POKKISHANGAL**, 207A- Jaheer Husain Street, Koodal Nagar, (Thathaneri P.O.), Madurai - 625 018, S.India Cell : 9843049935 Ph: 0452 7966138
Email: rathnakumar.t@gmail.com தமிழ் வலைதளம்: paralogapokkishangal.com
You Tube : paralogapokkishangal

## “அசைவில்லா நம்பிக்கை” பரிபூரணத்தை வருஷிக்கும்!

**நா**ம் பூரண பரிசுத்தம் அடைவதும், முற்றிலுமாய் நன்மையினால் நிறைவதும், சகல ஞானத்திலும், சகல திவ்ய சுபாவத்திலும் வளர்ந்து புருஷராய் மாறுவதும், **கிறிஸ்து வரும் போது அவரோடு எடுக்கப்படுவதுமே..... நமது கிறிஸ்தவ நம்பிக்கை!** இப்போது, கீழ்வரும் வசனங்களைக் கவனித்து வாசியுங்கள். “அல்லாமலும், நம்முடைய நம்பிக்கையை அறிக்கையிடுகிறதில் அசைவில்லாமல் உறுதியாயிருக்கக்கடவோம். வாக்குதத்தம் பண்ணினவர் உண்மையுள்ளவராயிருக்கிறாரே” (எபி.10:23). ஆ, இது எத்தனை பரவசமும் நம்பிக்கையின் ஆதாரமான வசனமாய் உள்ளது!

நம்முடைய நம்பிக்கையை அறிக்கையிடுகிறதில் **அசைவில்லாமல்** உறுதியாயிருக்கக்கடவோம் என்று எழுதப்பட்டிருப்பதைப் பாருங்கள். ஆம், நீங்கள் போகுமிடம், வருமிடமெல்லாம் இந்த ஒப்பற்ற திவ்விய நம்பிக்கையை அறிக்கை செய்து, முழங்கிட வேண்டுமல்லவா? காண்பதை அல்லது அடைந்ததை நாம் நம்புவதென்பது இல்லை, அது அர்த்தமற்ற செயலாகும். நாம் நம்புவதெல்லாம் இன்னமும் காணாத, இன்னமும் அடையாத.... நம்மை விட்டுத் தூரமாயிருப்பதையே நம்புகிறோம். ஒன்றை நாம் உறுதியாய் அறிந்திருக்கிறோம். அதென்னவெனில், சுவிசேஷத்தின் வாக்குதத்தங்களும், சத்தியங்களும் “கீழ்படியும் மனம் கொண்ட யாவருக்கும்” நாம் நம்பியது நிச்சயமாகப் பூரணமாய் நம்மை வந்து அடையும்! இந்த நம்பிக்கையில் நாம் அசைக்கப்படாதபடியே அதை இறுகப் பற்றிக்கொள்ள வேண்டும்!

நாம், குறிப்பாக ஆரம்ப ஜீவியத்தில் பாவத்தில் வீழ்ச்சியடைந்து விட்டால், ‘உடனே’ குதித்தெழுந்து, இந்த நம் நம்பிக்கையை அறிக்கை செய்ய வேண்டும். ஆம், நம் பாவ வீழ்ச்சியை என்ன, ஏது என்று ‘சோர்வுற்று’ விளக்கிக் கொண்டிருக்கக் கூடாது..... அதற்கு மாறாக, நாம் எக்காளமிட்டு இப்படிக் கூற வேண்டும், “நான் பாவத்தில் வீழ்ந்தது உண்மைதான்.

அதேசமயம் சுவிசேஷத்தின் நம்பிக்கையோ, நிலைத்த உண்மையாய் இருக்கிறபடியால் நான் பாதிக்கப்படப் போவதில்லை.... நான் இவ்வழியாய் தொடர்ந்து சென்று விலைக்கிரயத்தை செலுத்துவேன்! இலக்கை நான் அடைந்தே தீருவேன்!!'' என, வெற்றி முழக்கமிடுங்கள்.

ஊக்கமளித்திடும் நீதிமொழிகள் 24:16 வசனத்தை கேளுங்கள்: ''நீதிமான் ஏழுதரம் (ஏழுதரம் என்ற பதத்தை ஏழு எழுபதுதரம் என இயேசு விசாலமாக்கி வைத்தார். அதாவது கணக்கற்ற ஏராளமான தடவை) விழுந்தாலும் திரும்பவும் எழுந்திருப்பான்''. இந்த இடத்தில் நான், மறுபடியும் ''**குதித்தெழுவான்**'' என்ற பதத்தை உபயோகித்தே நான் வாழ்ந்தேன்! ஊர்ந்து தவழ்ந்து.... எங்கே இனியும் நம்பிக்கை உண்டாகுமோ என்று செத்தவனைப்போல் இருப்பதல்ல..... 'ஜீவனோடு' மறுபடியும் குதித்தெழ வேண்டும்! உங்கள் நம்பிக்கையின் அறிக்கை அசைக்கப்படாதபடி இறுகப் பற்றிக்கொள்ளுங்கள்! ''விழுந்து கொஞ்ச நாள் கூட இருக்காது ...ஹ...ஹா...இப்போதும் விழுந்து விட்டாயே'' என்று சத்துருவாகிய சாத்தான் சொல்லுவான். இப்போது நீங்கள் என்ன சொல்ல வேண்டும்? ''இதுவொன்றும் என்னைப் பாதித்து விடாது.... **சுவிசேஷம் எனக்கு அளித்த நம்பிக்கை நிலைத்த உண்மையாயிற்றே!**'' என எதிரொலிக்க முழங்க வேண்டும்.

நாம் மனுஷீகப்பிரகாரமாய் நினைப்போமென்றால், 'முகங் குப்புற விழுந்து' வீழ்ச்சியடைந்த நாம், மனம் தளர்ந்து, தைரியத்தை இழந்துதான் இருக்க வேண்டும். ஆனால் இது முற்றிலும் தவறு! என்னதான் நான் வீழ்ந்தாலும், தேவனுடைய வார்த்தைகளும் அவரது வாக்குதத்தங்களும், அது அளித்திடும் நம்பிக்கையும் கொஞ்சமும் மாறாமல் நிலைத்த உண்மையாய் இருக்கிறதே!

**தேவன் நம்மை அழைத்தபோது நாம் எப்பேற்பட்ட இழி பிறவி என்பதை அறிவார்! நாம் எளிதாய் தைரியத்தையும், விசுவாசத்தையும் இழந்து விடுவோம் என்பதையும் நன்றாய் அறிவார்! இத்தோடு முற்றுப்புள்ளி அல்ல, கேளுங்கள்..... நம்மை விசுவாசத்தில் பெலப்படுத்த, தான் வல்லமை பொருந்தியவர் என்பதையும் தேவன் நன்றாய் அறிவார்!**

ஆம், தேவனும், அவருடைய வார்த்தைகளும் நம்முடைய பெலீனத்தைக் கணக்கில் வைத்திருக்கிறார்கள். மனுஷீகப் பிரகாரமாய், என்னால் எப்படி இலக்கை (Goal) அடைய முடியும்? எனத் தோன்றினாலும் ''நான் கொஞ்சமும் நம்பிக்கையில் அசைக்கப் படாமல்'' தேவ வசனத்தை இறுகப்பற்றிக் கொள்வேன்.... நான் இலக்கை அடைந்தே தீருவேன்!

வேதத்தில் புத்திமதிகள் காரணமில்லாமல் ஏனோதானோ என்று கூறப்படுவதில்லை! உங்கள் நம்பிக்கை அசைக்கப்படாதபடி இறுகப்பற்றிக் கொள்ளுங்கள் என ஏன் இவ்வளவு ஆணித்தரமாய் புத்தி சொல்லப்படுகிறோம்? ஏனெனில் தேவன் நம்மை அழைத்த நோக்கமாகிய மகா பெரியதும், **மகிமையுமான கிரியையை அவரே நம்மில் செய்து முடிப்பதற்காகவே** அப்படி புத்தி கூறியுள்ளார்.

சரியாய் சொல்ல வேண்டுமென்றால், இது ஓர் நம்பவே முடியாத மேன்மையாகும்! நாம் பிசாசின் வலையாகிய பெருமையில் சிக்கிக் கொள்ளாமலும், மேட்டிமை அடைந்திடாமலும் தாங்கிக் கொள்வதற்காகவே, நாம் உண்மையாய் "முகங்குப்புற வீழ்வது" அவசியமாயிருக்கிறது. ஆம், ஆரம்பத்தில் நமக்குத் தோல்வியே கிட்டுவது தேவனுடைய நிச்சயமான, நியமிக்கப்பட்ட திட்டங்களில் ஒன்றாகும்! அப்போதுதான் நாம் முற்றிலும் தாழ்த்தப்பட்டு, நம் ஒவ்வொருவருக்கும் தேவன் தரவிரும்பும், தன் சொல்லொண்ணா தேவ கிருபையை! மகிமையை! நம் ஆத்துமாவிற்கு எவ்வித 'அகந்தையான' சேதமுமில்லாமல் தாழ்மையுடன் தாங்கிப் பெற்றுக்கொள்ள முடியும்! **இதுவே நம்முடைய சுவிசேஷத்தின் நம்பிக்கை!** இது, படகிற்கு 'அடிபாரம்' பெற்றதுபோல் ஆகும். படகின் அடியில் எந்த கனமான பாரமும் இல்லாவிட்டால், பலத்த காற்று வீசி அப்படகை அமிழ்த்திவிட முடியும். படகு கவிழ்வது தேவனுடைய நோக்கம் இல்லையே! எனவே தான், நம் படகிற்கு அடிபாரம் நிச்சயம் வேண்டியதாயிருக்கிறது.

என் பங்கிற்கு, நான் முன் செல்வதும், அனேகம் தடவைகள் வீழ்ச்சியடைந்து எழுவதும்.... நடைபெற்று, இப்போது அது போதுமானதாகி விட்டது!

**சரியாகச் சொல்ல வேண்டுமென்றால், என் எல்லா வீழ்ச்சிகளுக்காகவும் நான் 'இப்போது' மகிழ்ச்சியடைகிறேன். நான் அனேகம் தடவை வீழ்ந்த படியால், ஜெயமானது முற்றிலும் தேவனுடைய கிருபையால் மாத்திரமே முடியும் என்ற உணர்வாலும் நிறைந்துவிட்டேன்!**

எனக்காக, தேவன் பெரிய காரியங்களைச் செய்திருக்கிறார். என் தேவன் செய்திருக்கும் மாபெரும் அற்புதமான கிரியைகளை நான் பெற்றுக் கொண்டதில், எனக்கு எந்தவித சிரமமும் இப்போது இல்லை! 'இப்போது' இந்த ஜெயத்தை பேசுவதாலும் எனக்கு ஒன்றும் இல்லை. இதைப் பேசுவதால் எனக்குள்ளிருந்து ஒன்றும் பெருமை கொண்டு எழவில்லை! இதற்கு காரணம் என்ன? தேவன் என்னை 'முகங்குப்புற' விழச்செய்து நன்றாய் நொறுக்கி விட்டார்! "இப்போதுகூட" என் பெலவீனத்தின் இழிவான "வீழ்ச்சியின் துர்நாற்றத்தை" என்னால் முகர

*முடிகிறது! இவ்வாறு "சிறுமைப்பட்ட எண்ணத்தை" என்னில் நிலைவரப்படுத்திய தேவனுக்கே ஸ்தோத்திரம்!*

*இச்செய்தியை நீங்கள் கேட்பதும், அதை நினைவில் வைத்துக் கொள்வதும் மிகவும் விலையேறப்பெற்றதாகும். நீங்கள் மறுபடியும் விழும்போது, இவ்வாறு நீங்கள் சொல்ல முடியும்: "சரிதான், நான் முகங்குப்புற விழுந்து, போதுமான அளவு நொறுக்கப்படவில்லை! எனவே எனக்கு இன்னமும் இந்த வீழ்ச்சியின் 'உரசல்' தேவைதான்! ஏனெனில் அப்போதுதான் தேவன் என்னில் தன் மகத்துவமான கிரியையை நிறைவேற்றிட முடியும்!" என்ற நல்ல அறிக்கை!*

*நாம் செய்யும்படி சொல்லப்பட்ட புத்திமதி என்ன? நம்முடைய* **நம்பிக்கையின் அறிக்கையானது அசைக்கப்படாமல்** *இறுகப்பற்றிக் கொள்ள வேண்டும்! அதை, ஒரு வினாடி கூட விட்டுவிடக் கூடாது! முகங்குப்புற நீங்கள் பரிதாபமாய் விழுந்து, உங்கள் மூக்கு உடைபட்டு உதிரம் கொட்டியிருக்கும். அதே நேரத்தில், உங்கள் நம்பிக்கை அசைக்கப்படாமல், அதை இறுகப்பற்றிக்கொண்டு..... குதித்தெழுந்து அந்த நம்பிக்கையை அறிக்கை செய்யுங்கள்!*

*சாத்தான் உங்களைப் பார்த்து, "இப்படியே நீ தொடர்ந்து விழுந்து கொண்டிருந்தால் உன் வாழ்க்கையில் நன்மையானது ஒன்றும் உருப்படாது" என்பான். நீங்கள் சாவதானமாய் அவனைப் பார்த்து, "சத்துருவாகிய சாத்தானே.... தேவையான அளவுக்குமேல் அதிகமாய் இப்படி விழ தேவன் என்னை அனுமதிக்க மாட்டார்!" என்று பதிலடி கொடுங்கள். இதுவன்றோ நம்முடைய நம்பிக்கையின் அறிக்கையை நாம் அசைவில்லாமல் இறுகப்பற்றியிருப்பது! ஆம், இதை அப்படியே தொடர்ந்து செய்யுங்கள். காரியம் உங்களில் நன்றாய் முடியும்.*

*பெலவீனமானதும், இல்லாதவைகளும், இழிவானவைகளும், பைத்தியமுமான ஜனங்களையே தேவன் தெரிந்து கொண்டார் என எவ்வளவு தெளிவாய் எழுதப்பட்டிருக்கிறது! பரிதாபத்திற்குரிய இழிபிறவிகளாகிய நம்மில் தன் மகிமையான கிரியையை தேவன் முடிக்கத் திராணி அற்றவராய் இருந்தால் "வீழ்ச்சியடைந்த நம்மை" அவர் நிச்சயம் தேர்ந்தெடுத்திருக்கவே மாட்டார். ஆம், வாக்குதத்தம் செய்தவர் உண்மையுள்ளவர், அவர் அப்படியே செய்வார். அவர் ஒருவருக்கே, சகல கனமும் துதியும் உண்டாவதாக! ஆமென்.*

*– எலியாஸ் அஸ்லாக்ஸன்*

## ‘ஆராதனை’ இழந்த கிறிஸ்தவம்!

தேவனால் ஆட்கொள்ளப்பட்ட நீங்காத சிந்தனையால் நிறைந்திருக்கும்படியே நாம் அழைக்கப்பட்டிருக்கிறோம்! ஏனெனில், தேவன் ஆவியாயிருக்கிறார்.... அவரை தொழுதுகொள்ளுகிறவன் ஆவியோடும், உண்மையோடும் தொழுது கொள்ள வேண்டும்!

நாமோ, ‘வீழ்ச்சியுற்ற’ மனிதர்கள், ஆகவே நாம் ‘எழுந்துநின்று’ தேவனை ஆராதிப்பது கூடாத விஷயம்! **பரிசுத்த ஆவியானவர் மாத்திரமே,** தேவனை ஆராதிக்கும்படி நம்மை எழுந்து நிற்க செய்ய முடியும். ஜெபஜீவியம்கூட, பரிசுத்தாவியின் துணை கொண்டே ஏற்ற விதமாய் ஜெபித்திட முடியும்! தேவனின் யாதொன்றிற்கும், நம்மைத் தகுதிப்படுத்துவது பரிசுத்த ஆவியானவர் மாத்திரமே ஆவார்.

தேவனை ஆராதிப்பதற்கென்றே மனுஷன் சிருஷ்டிக்கப் பட்டான்! தன்னை ஆராதித்து இசைத்திட, அவர் மனிதனுக்கு மிகப்பெரிய இசைக்கருவி தந்தாரென்றே சொல்ல வேண்டும்! தேவன் கூறினார் “நான் சிருஷ்டித்த எல்லா சிருஷ்டிப்புகளுக்கும் மேலாக, உனக்கே இந்த விலையேறப்பெற்ற வீணையை தந்துள்ளேன்..... நீ மாத்திரமே, சிருஷ்டிப்புகளில் ஒன்றும் இசைத்திட முடியாத மாபெரும் இசையை, இந்த வீணையில் இசைத்து நீ என்னைத் தொழுதிட முடியும்!” எனக்கூறினார்.

**அந்தோ, மனுஷன் பாவஞ்செய்தவுடன்..... ‘தொழுகையின்’ இந்த அற்புத வீணை இசைக்கருவியை, மண்ணில் எறிந்துவிட்டான்!**

கிறிஸ்து இந்த பூமிக்கு ஏன் வந்தார்? பின்மாறிப் போன மானிடர்களை, மீண்டும் “ஆராதிக்கிறவர்களாய்” மாற்றும்படியே வந்தார். நம்முடைய ஆதி நிலை, ஆராதிப்பதற்கென்றே சிருஷ்டிக்கப் பட்ட நிலையாகும். சிருஷ்டிக்கப்பட்ட நமக்கு ஏற்ற உகந்ததாய் இருப்பதே, இந்த தெய்வ ஆராதனை தான்! ஆனால் “ஆராதனை.... ஆராதனை எனக்கூறிக் கொள்ளும் இன்றைய கிறிஸ்தவ சபைகளில் தேடிப்பார்த்தால், **மெய்யான ஆராதனை** அங்கு இல்லை!” அந்த ஆதி மதுர இசையின், இன்னிசை ஓசை அங்கு காணப்படவில்லை!

தெய்வ ஆராதனையை உடனே விளக்கிச்சொல்ல “அதை ஒருவன் தன் **இருதயத்தில் உணர வேண்டும்!**” என்பதேயாகும். ஆராதனை வழிமுறையை ஒருவன் கடைப்பிடித்துவிட்டு, தன் இருதயத்தில் தேவனை உணராத மனுஷன், “கர்த்தரை ஆராதிக்கவில்லை” என்றே உறுதியாய் கூறமுடியும். அடுத்தபடியாக, தேவனை தன் இருதயத்தில்

*உணர்வடைந்த நிலையில், 'மெய் ஆராதனை' பெற்றவன் தேவனைக் குறித்த ஆச்சரியத்திலும், அதிசயத்திலும், மகிழ்ந்து போவான்! அவ்வித தேவ சமூகத்தில், கரைபுரண்ட மகிழ்ச்சியில், ஆராதிப்பவன் முற்றிலுமாய் தன்னைப் பணிந்து தாழ்த்திவிடுவான்!*

*தேவனை ஆராதிக்க உந்தும் ஒருவனுடைய ஆவியில், முதலாவது நிலைகொண்டிருக்க வேண்டியது "அளவில்லாத வல்லமை நிறைந்த தேவன்மீது கொண்ட நம்பிக்கையேயாகும்!" இப்படி ஒரு விசால நம்பிக்கையை தேவன் மீது வைத்திராதவன், அவரை ஆராதித்திட முடியாது!*

**ஆகவே, தேவனைத் தன் ஆவியில் நெருங்கினவன், அவருடைய மகத்துவ மேன்மையை புகழாமல் இருந்திட முடியாது! அவரது ஆவியை நெருங்கிவிட்ட அவன், தேவனால் முற்றிலும் சிறைப்பட்டு போவான்! சர்வ வல்ல தேவனுடைய அன்பினால் கவரப்பட்டு, தேவனோடு ஒன்றர கலந்து, அவருக்கு முன் "அதமானேன்!" என முகங்குப்புற பணிந்து கிடப்பான்!!**

*இந்த அற்புத சமயத்தில்தான், தன் முழுப் பெலத்தையும் கொண்டு* "**தேவனே நான் உம்மை நேசிக்கிறேன்!**" *என பரவசமாய் அவரை அன்புகூருவான். அந்த முழுமையான நேசத்தில் தெய்வ பயமும், அதிசயமும், ஏக்கமும், ஆச்சரியமும் கலந்திருக்கும்! சில சமயங்களில், தன் ஆராதனையின் இறுதியில் 'மூச்சடைத்து மௌனமாகி' விடுவான்!*

*அந்தோ, இன்றைய தனி கிறிஸ்தவன் தொடங்கி, சபை மட்டும்..... தேவனை மனம் பொங்க ஆராதிக்கும் நிலையைக் காண்பது அரிதாய் போய்விட்டது! தன்னுடைய 'ஸ்தாபன கட்டுகளில் சிக்கியிருக்கும் தேவனையே' அவன் காண்கிறான்! சுயத்தின் விருப்பத்திற்கு இட்ட கட்டளைக்கு இணங்கும் 'சிறிய தேவனே' அவனுக்கும், அவன் சபைக்கும் இருக்கிறது! அவன் துன்பம் அடையும் போது அவர் உதவிசெய்ய வரவேண்டும்! அவன் தூங்கும்போது அவர் விழித்திருக்க வேண்டும்!* **இந்த ஸ்தாபன கட்டுகளில் சிக்கியிருக்கும் ஆராதனையில், தேவனுக்கு வானுயர்ந்த மதிப்பு ஒன்றும் இருப்பதில்லை!** *ஆனால், பரிசுத்த ஆவியானவர் தேவனை நமக்கு காட்டும்போது "அவர் இருக்கிற வண்ணமாக நாம் கண்டு, ஆச்சரியத்திலும் அதிசயத்திலும் மூழ்கி" உள்ளம் நொறுங்கி நெகிழ்ந்து, தேவனை ஆராதித்திட முடிகிறது!*

*மெய்யான ஆராதனையே, தேவனோடு நம்மை உயரச்செய்கிறது! அவன் தேவ சமூகத்தை இழந்திருந்தால், அவனைத் தாழச் செய்கிறது! கிறிஸ்தவனுக்கும், கிறிஸ்தவ சபையிலும் நிலவிவரும் கொடிய வியாதி என்னவென்றால், தேவன் அவர்களுக்கு சாமானிய சகஜமாய்*

*இருப்பதுபோல், இருப்பதுதான்! மகா உன்னத தேவனை அவர்கள் கொண்டிருப்பதாகத் தோன்றவில்லை! ஏனெனில், 'ஆராதிப்பவன்' பரிசுத்தமும் தாழ்மையுமாய் இருந்திருக்க வேண்டும். ஆத்துமத்தின் இந்த இரகசியமே, தேவனுடைய சாயலை அவன் மனதாரக் கண்டு உணரச் செய்திட முடியும்!*

*அவரால் ஈர்க்கப்பட்ட ஆராதனையா? அல்லது அவரது ஊழியமா? என்ற கேள்வி, ஓர் சவாலாய் முன் வைக்கப்படுகிறது. இன்றோ சபைகளில், மனந்திரும்பியவன், உடனடியாய் தேவனுக்கு ஊழியஞ் செய்கிறவனாய் மாறிவிடுகிறான்! அல்லது, அப்படிச் செய்யும்படி அங்கே தலைமையிலுள்ளவர்கள் மாற்றி விடுகிறார்கள்! இதுபோன்ற நிலையை தேவன் ஒருபோதும் விரும்பவில்லை.*

**மனந்திரும்பி விசுவாசியாய் மாறிய ஒவ்வொருவனும் 'முதலாவது' அவரை ஆராதிக்கவும்! 'இரண்டாவதாகவே' அவருக்கு ஊழியஞ் செய்யவும் தேவன் அழைத்திருக்கிறார்! மெய்யாகவே, ஆராதிப்பவனின் ஊழியத்தில் மாத்திரமே 'நித்தியம்' இடம்பெறும்!**

*'இது இழந்தவன்' செய்திடும் எத்தனை ஊழியமானாலும், அது மரம்! வைக்கோல்! புல்!..... கடைசி நாளில், அது இருக்கும் இடம் தெரியாமல் அழிந்தும் போய்விடும்!!*

*தன் தனிப்பட்ட ஜீவியத்தில், கிறிஸ்துவின் மீது சொல்லொண்ணா அன்பினால் பற்றியெறியும் ஒருவன் இருக்கிறானா? எனக்கு அவனைக் காட்டுங்கள். அந்த பரிசுத்தவானின் வஸ்திரங்கள் கூட தெய்வ ஆராதனையின் நறுமணம் மணக்கும்! மெய்யாய் சொல்லுகிறேன் கேளுங்கள்: "வரப்போகும் சர்வ சங்க சபையில், ஆராதனையின் நறுமணம் வீசும் பரிசுத்தவான்கள் மட்டுமே இருப்பார்கள்!" ஆமென்!*

*– A.W. டோசர்*

---

## 'அவரால் ஈர்க்கப்பட்ட' ஜெப வாழ்க்கையே, ஜெய வாழ்க்கை!

*"இஸ்ரவேல் புத்திரரே, நீங்கள் முற்றிலும் விட்டு விலகி, அவரிடத்தில் திரும்புங்கள்!" என்றே தீர்க்கதரிசி அழைப்பு விடுத்தார் (ஏசாயா 31:6). 'மாற்றம்' என்பதற்கு அர்த்தம் என்ன? ஒருவன் 'தன்னிடமிருந்து திரும்பி தேவனிடத்தில்' வந்து சேருவதற்கே 'மாற்றம்' என பொருள்படும். ஒருவன் வெளித்தோற்றத்தில் நல்ல பல கிரியைகளைச் செய்வதற்கும், 'மாற்றம்' என்பதற்கும் ஏராளமான வித்தியாசம் உண்டு! அது ஏனென்றால், நல்ல கிரியைகளை ஒருவன் வெளித்தோற்றத்தில் தாராளமாய் செய்துவிடலாம்! ஆனால், 'மாற்றம்' என்பது ஒரு மனுஷனின் ஆழத்திலிருக்கும் அவனது* **அந்தரங்க ஆவியில்**

நடைபெறும் செயலாகும்.

நீங்கள் மாற்றமடைந்து 'தேவனை அறிவதற்கு' முழுமனதான தீர்மானத்தை ஓர் நாளில் நீங்கள் எடுத்திருந்தால், உங்களுக்குள் ஒரு பெரிய நிகழ்ச்சி நடந்ததை கண்டிருப்பீர்கள்! அது என்னவெனில், **"நீங்கள் தேவனிடத்தில் இடைவிடாது நெருங்கி வர விரும்பும், உங்கள் இருதயத்தின் நல்ல விருப்பமேயாகும்".** இவ்வாறு, நீங்கள் தேவனை எவ்வளவு நெருங்கி வந்தீர்களோ..... அவ்வளவாய், தேவன் மீது கொண்ட விருப்பம் மிக வலிமையாய் உங்களில் பெருகிக்கொண்டே போகும். அந்த விருப்பத்தின் வளர்ச்சி இயற்கையானதாகவும், உங்களுக்குப் பழக்கமானதாகி.... முடிவில் உங்கள் முழு ஜீவியத்திற்கும் தேவனையே மையமாக வைத்தும் மகிழ்ந்து போவீர்கள்!

ஒன்றை ஆழமாய் நிச்சயித்துக் கொள்ளுங்கள்: "ஒருவன் திவ்வியமான தேவ கிருபையை பெற்றிருந்தால் மாத்திரமே, தேவனை அறிந்து கொள்ள முடியும்!". ஆகவே, உங்கள் சொந்த முயற்சியின் மூலம் தேவனை அறிந்துகொள்ள முடியும் என, தயவாய் எண்ணி விடாதீர்கள்.

> **தேவன் உங்களைத் தன்னிடம் அழைப்பதற்கு, உங்களைத் தெரிந்து கொண்டால் மாத்திரமே ஒழிய.... ஒருவன் தேவனிடம் கிட்டிச் சேர்வது ஒருக்காலும் முடியாது. இந்த உண்மையை இயேசு கூறும்போது "நீங்கள் என்னைத் தெரிந்துகொள்ளவில்லை, நான் உங்களைத் தெரிந்து கொண்டேன்!" என ஆணித்தரமாகக் கூறினார் (யோவான் 15:16).**

நாம் செய்ய வேண்டியதெல்லாம் வெகு சொற்பமேயாகும். "தேவனை அறிய வேண்டும் என்ற உங்கள் நெஞ்சத்தின் விருப்பத்தை பின் தொடர்வதும்! உலகத்தின் துர்குணத்திலிருந்து திரும்புவதும்! தேவனை விட்டுவிடாது உறுதியுடன் அவரோடு நடப்பதற்கு தீர்மானிப்பதுமே உங்கள் பங்கு!!" தேவனுக்கென்று ஒரு கவர்ச்சியான சுபாவம் உண்டு! அவரது அந்த மாசற்ற கவர்ச்சியே "உங்களை அவரிடம்" இழுத்துக் கொள்ளும்! அவர் உங்களைத் தன்னிடம் இழுத்துக் கொள்ளும் அதே வேளையில், **உங்களை சுத்திகரிக்கவும் செய்வார்.** ஆம், பூமியிலிருக்கும் தண்ணீரை சூரியன் இழுத்துக் கொள்கிறது. வானிற்குச் சென்றுவிட்ட நீர், எத்தனை சுத்தமாய் இருக்கிறது! அவ்வாறு இழுத்துக் கொள்ளப்பட்ட தண்ணீர்கள் யாவும், சூரிய வெப்பத்தின் கரத்திற்குள்ளாகவே அடங்கியிருக்கும்! அதே விதமாகவே, நாமும் தேவனால் இழுத்துக் கொள்ளப்பட, நம்மை மனப்பூர்வமாய் ஒப்புக்கொடுத்திட வேண்டும்! அவர் சமூகத்தில் தூய்மை பெறவும் வேண்டும்!

*தேவனே நமது வாழ்வின் மையம்! வாழ்வின் மையத்தில் இருப்பது எதுவோ, அது எப்போதும் வலிமையான கவர்ச்சி கொண்டதாய் ஜொலித்திடும்! தேவனையே மையமாய் வைத்திருக்கும் வாழ்க்கை, எவ்வளவு மகத்துவமுள்ளதாய் நம்மில் உயர்த்தப்பட்டதோ, அவ்வளவு அதிகமாய் அந்த கவர்ச்சிக்கு இணங்கி நம்மையே "சமர்ப்பணம்" கொடுத்தவர்களாய் மாறிவிடுவோம்!*

**நம்முடைய ஆவி எவ்வித வலுக்கட்டாயமும் இல்லாமலே "ஓர் அன்பின் திடப்பொருளாய்" அவரது மையத்தில் விழுந்து கிடப்போம்! இவ்வாறு அவரது மையத்தில் நாம் எத்தனை பூரண இளைப்பாறுதலும், சொல்லொண்ணா நம்பிக்கையுடனும் விழுந்து கிடக்கிறோமோ, அந்த அளவிற்கு 'சொந்த முயற்சி ஏதுமின்றி' மிக எளிதாய் அவருக்குள் நாம் ஓங்கி வளர்ந்திடுவோம்!**

*இப்படியெல்லாம் சீரான பாதையிருப்பதால், தேவப்பிரியரே..... தேவனிடம் நீங்கள் கொண்ட கவனத்தின் திசையில் நிலைத்து முன்னேற ஜாக்கிரதை கொண்டிருங்கள்! நீங்கள் தேவனை நெருங்கி நெருங்கி கிட்டிச் சேரும் இனிய வாழ்க்கையில், எத்தனை துன்பங்கள் உங்களைச் சந்தித்தாலும், உங்களது மனது 'இளக்கரித்துப்போக' அனுமதித்து விடாதீர்கள்! துன்ப வேளையில் அவசரப்படாதீர்கள்..... அவர் சீக்கிரமே வந்து அளவில்லாத தம் கிருபையை உங்கள் மீது பொழிந்திடுவார்! ஆனால் ஒன்று.... என்னதான் சம்பவித்தாலும், நீங்கள் மாத்திரம், உங்கள் வாழ்வின் மையத்தில் வீற்றிருக்கும் அவரிடத்தில் திரும்பி வந்துவிட, எப்போதும் உண்மையுள்ளவர்களாய் இருங்கள்!*

*அவரையே மையமாய் கொண்டவர்களின் வாழ்க்கை, என்றென்றும் செழிக்கும்! அப்படியானால், இனிமுதற்கொண்டு "வெள்ளம் போல் சத்துரு வந்தாலும் 'உங்கள் ஜீவிய மையத்தி லிருக்கும்' கர்த்தருடைய ஆவியானவர் அவனுக்கு விரோதமாய் கொடியேற்றுவார்" (ஏசாயா.59:19). இதுவே ஆனந்தமான ஜெப வாழ்க்கை! ஜெய வாழ்க்கை!*

*(மேடம் குயான் எழுதிய 'ஜெபத்தில் தேவனை ருசிப்பது எப்படி?' என்ற புத்தகத்திலிருந்து எடுக்கப்பட்டது. இந்த பரவசம் நிறைந்த புத்தகம் பெற 'பரலோக பொக்கிஷங்கள்' மதுரை விலாசத்தை அணுகுங்கள்).*

*– மேடம் குயான்*

**எல்லாவற்றிற்கும் ஸ்தோத்திரம்? ஆவியில் நிறைந்தவனால் முடியும்!**

**வே**தம் கூறும் அனைத்து சத்தியங்களும், நம்முடைய அனுதின வாழ்வில் நிறைவேறக் கூடியதேயாகும். உதாரணமாக "எப்பொழுதும் எல்லாவற்றிற்காகவும் பிதாவாகிய தேவனை ஸ்தோத்தரியுங்கள்" என்ற வசனத்தைப் பாருங்கள் (எபேசியர் 5:20). இந்த வசனம், யாருமே கடைபிடிக்காததைப் போலவே தோன்றுகிறது. ஆனால், **எந்த ஒரு தேவ கற்பனையும் நமக்கு சகாயம் செய்யும் ஏதுகரம் இல்லாமல் தரப்படுவது இல்லை!** எந்த சூழ்நிலைக்காகவும், எப்போதும் தேவனை ஸ்தோத்தரித்து வாழ்வதற்கு, ஒருவன் "துன்மார்க்கத்திற்கு ஏதுவான மதுபான வெறிகொள்ளாமல், ஆவியினால் நிறைந்திருக்க வேண்டும்" என்ற ஏதுகரத்தை 18-ம் வசனத்தில் தேவன் நமக்குத் தந்திருக்கிறார். நாம் கண்டிப்பாய் சொல்ல வேண்டுமென்றால், ஒருவன் பரிசுத்த ஆவியினால் நிறைந்திருக்காத பட்சத்தில் "எல்லாவற்றிற்காகவும்" ஸ்தோத்திரம் செய்வதென்பது கூடாத காரியமேயாகும்!

இங்கு நமக்கு தரப்பட்ட "**மதுபான வெறி**" என்ற உவமானம் முக்கியமாகும்! அதைப்போலவே, "**ஆவியினால் நிறைந்தவனும்**" ஜீவித்திட வேண்டும். நீங்கள் மெய்யாகவே ஆவியினால் நிறைந் திருக்கிறீர்களா? **உங்கள் ஆவியின் நிறைவை சோதிப்பதற்கே, வாழ்வின் கடினங்கள் உங்களுக்குச் சம்பவிக்கிறது** என்பதை அறிவீர்களாக!

இங்கே பாருங்கள், மூன்று வாலிபர்கள்.... சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ! இவர்கள் முன் இருந்தது என்னவென்று உங்களுக்குத் தெரியுமா.... கொடிய "எரிந்து கொண்டிருக்கும் அக்கினிச் சூளை!" அந்த அக்கினிச் சூளை, வேறு யாருக்கும் அல்ல 'இவர்களைத் தூக்கி போடுவதற்கே' எரிந்து கொண்டிருக்கும் அக்கினிச் சூளை! ஆகிலும் இந்த எபிரெய வாலிபர்கள் என்ன சொன்னார்கள் தெரியுமா? **அது துதியைவிட இன்னும் வலிமையான அறிக்கை** என்றே கூற வேண்டும்! இந்த மூன்று இளைஞர்களோ, அந்த எரிதழலை மூட்டிய ராஜாவைப் பார்த்து "நேபுகாத்நேச்சாரே, இந்த காரியத்தைக் குறித்து உமக்கு உத்தரவு சொல்ல எங்களுக்கு அவசியமில்லை. நாங்கள் ஆராதிக்கிற எங்கள் தேவன், எங்களைத் தப்புவிக்க வல்லவராயிருக்கிறார்" (தானி.3:16,17) என்றே அறிக்கை செய்தார்கள்! கவனியுங்கள், இந்த காரிருள் நேரத்தில், ஒருவன் பரிசுத்த ஆவியினால் நிறைந்திருக்காவிடில் இத்தனை வலிமையான துதியின் அறிக்கையை கூறவே இயலாது!

திடீரென உங்கள் மகள் "அம்மா! அம்மா! அண்ணன் ட்ரெசிங் ரூம் கண்ணாடியை உடைத்து விட்டான்! என் காலில் இரத்தம்

கொட்டுகிறது'' என கூவி அழும்போது உங்கள் முழு வீடும் ஆத்திரமும், அவசரமும் அடையும் அல்லவா? **இந்த சூழ்நிலையிலும்** 'அண்ணனாகிய' நீங்கள் 'ஆவியின் வல்லமையினால்' அமைதியாய் இருக்கவும், தொடர்ந்து ஸ்தோத்திரம் செய்யவும் முடியும்!

மற்ற ஒரு உதாரணம்: பவுல் கூறினார் ''**ஒன்றுமில்லாதவர்க ளென்னப்பட்டாலும்** சகலத்தையும் உடையவர்களாகவே எங்களை விளங்க பண்ணுகிறோம்'' என கம்பீரமாய் கூறினார் (2கொரி.6:10). யாரால் இப்படி கூற முடியும்? ஒருவனுக்கு 'கையில்' பணம் இருந்தால் மாத்திரமே, 'பதற்றமாய்' வங்கியில் சென்று பணம் எடுக்க அவசியமில்லை. ஆனால் '**ஒன்றுமில்லாமலே**' சகலமும் இருப்பதை போல் அமைதி காணும் ஓர் நிலை, ஆசீர்வதிக்கப்பட்ட நிலையாகும். இதுபோன்ற நிலை ''மதுபான வெறி'' உவமையின்படி, ஆவியினால் நிறைந்திருந்தால் மாத்திரமே சம்பவித்திட முடியும். எது இல்லா விட்டாலும், மதுபான வெறி கொண்டவன் பாடுவான், தைரியமாய் நிற்பான், கலகலவென்று பேசுவான்! இது எப்படி சம்பவித்தது? அவன் 'பரிசுத்த ஆவியில்' இப்போது நிறைந்திருக்கிறான். இதுபோலவே ஆவிக்குரிய மனுஷன் எந்த சூழ்நிலையிலும்.... ''பரிசுத்த ஆவியை சார்ந்து கொண்டு'' துதி ஏறெடுக்க முடியும்!

**குடிப்பவன், முதலில் ஒரு கிளாஸ் குடிக்கிறான்.... அது அவனுக்குப் போதாது.... தொடர்ந்து பத்து கிளாஸ் குடித்து மதுபான வெறி நிலை அடைகிறான்! இந்த நிலையில்தான், அவன் சங்கீதம் பாடி மகிழ்ச்சியா யிருக்கிறான். அதுபோலவே, பரிசுத்த ஆவியை பருகி பருகி உங்கள் இருதயம் நிறையும் வரை பருகுங்கள்! இவ்வாறு நிரப்பப்பட்டவன்தான் 'அந்த வெறி கொண்டு' எப்போதும் சங்கீதம் பாடி .... எல்லாவற்றிற்காகவும் தேவனை ஸ்தோத்தரிப்பான்!**

மிகக் கொடிய சூழ்நிலை ஏற்பட்டதாக எண்ணி நீங்கள் துவண்டு போனீர்களோ? ஸ்தோத்திரம் செலுத்த விரும்பியும், உங்கள் உள்ளத்தில் இளைப்பாறுதல் இல்லையோ? இப்போது உங்களுக்குத் தேவையானது ஒன்றே ஒன்றுதான். அந்த மனுஷனைப் போல.... ஆவியைப் பருகி பருகி இருதயம் நிரம்பும் வரை பருகுங்கள்! எதுவரை இவ்வாறு நிறைய வேண்டும்? உங்கள் இருதயம் ஆவியின் வலிமை கொண்டதாய், அந்த இருதயத்தை கர்த்தரே முழுவதும் ஆட் கொண்டதாய், **கர்த்தருடைய மகிழ்ச்சியினால்** பொங்கும்வரை ஆவியை பருகுங்கள்! இதுபோல **கர்த்தருடைய ஆவியினால்** வெறிகொள்ள உங்களால் முடியுமா? கண்டிப்பாய் முடியும்! எளிய விசுவாசம் கொண்டவனுக்கு முடியும்! ஆவியை குடித்துப் பருகிட ''தன்னை

*முழுவதும் ஒப்புக்கொடுத்தவனுக்கு" முடியும்! இதற்கு, இந்த அற்புத செயலுக்கு,* **உங்கள் விசுவாசம்** *உங்களுக்குத் துணை நிற்கக்கடவது! இவ்வாறு, ஆவியில் குடித்து.... வெறித்து ஆனந்த களிப்படைந்தவன் மாத்திரமே 'எல்லாவற்றிற்காகவும்' ஸ்தோத்தரிப் பான்! அதுமட்டும் அல்ல, அவன் எல்லோரையும் பார்த்து "நீங்களும் என்னைப்போலவே எப்பொழுதும் எல்லாவற்றிற்காகவும் தேவனை ஸ்தோத்தரியுங்கள்" என ஆர்ப்பரிப்புடன் கூறுவான்!!*

*செழித்த நடைமுறை வாழ்விற்கு, எவ்வளவேனும் பொய்யு ரையாத தேவனின் கட்டளைக்கு செவிசாய்ப்போமாக. அது என்ன வெனில் "***நீங்கள் எல்லாவற்றிலேயும் ஸ்தோத்திரஞ் செய்யுங்கள்;** *அப்படிச் செய்வதே கிறிஸ்து இயேசுவுக்குள் உங்களைக் குறித்து தேவனுடைய சித்தமாயிருக்கிறது" (1தெச.5:18).*

*மீண்டும், முடிவாய் கேளுங்கள்: நீங்கள் மதுபானத்தினால் வெறி கொள்ள வேண்டாம்.... ஆனால், தயவாய் "ஆவியினால் நிரம்பி வழியுங்கள்" அப்போது உங்கள் இருதயத்தில் கர்த்தரைப் பாடி கீர்த்தனம் பண்ணுவது மாத்திரம் அல்லாமல், எல்லாவற்றிற்காகவும் பிதாவை ஸ்தோத்தரித்திட முடியும்! நிச்சயமாய் முடியும்!! (எபே.5:18,19,20) ஆமென்.*

*– ஸ்மித் விக்கிள்ஸ்வொர்த்*

---

## "அவரோடு ஐக்கியம்" இல்லாத, ஜீவியமும் ஊழியமும் வீண்!

**ந***மது ஜீவியமும் ஊழியமும் பாழாய்ப் போவது, நம்மில் ஒருவருக்கும் பிரியமாயிருப்பதில்லை! நாம் கனி நிறைந்தவர்களா யிருக்கவே விரும்புகிறோம். அப்படியானால், நமது ஜீவியத்தைப் பற்றியும் ஊழியத்தைப் பற்றியும் நாம் கவலைப்படுவதைவிட,* **அவரில் நிலைத்திருக்கும்படி** *கவலைப்படுவோமானால் 'அதுவே' எவ்வளவோ பாக்கியம்! கொடிக்கு ஒரு வேலை, செடிக்கோ பலவேலை!*

**நாம் கிறிஸ்துவில் நிலைத்திருப்பது 'ஒன்றையே' தேடுவோமானால்.... நாம் வளர, இலைகள்விட, காய்க்க, கனி கொடுக்க வேண்டிய யாவற்றையும் செடியாகிய கிறிஸ்து பார்த்துக் கொள்வார்.**

*"நீங்கள் என்னிலும் நான் உங்களிலும் நிலைத்திருந்தால் நீங்கள் மிகுந்த கனிகளைக் கொடுப்பீர்கள்" என்றார். ஆம், அவரில் நிலைத்திருப்பதே கனி கொடுப்பதற்குரிய ஒரே இரகசியம்!*

*அவருக்கு மகிமையான கனி கொடுப்பதெப்படி? என்கிற கவலை நமக்கு வேண்டாம். நாம் எவ்வளவு தீர்மானஞ்செய்தாலும் பிரயாசப்*

பட்டாலும் காரியம் வாய்க்காது. **நமக்கும் கிறிஸ்துவுக்குமுள்ள ஐக்கியம் சரியாயிருந்தால்,** நமது ஜீவியமும் ஊழியமும் சரியாயிருக்கும்! இதுதவிர, மற்ற யாவும் மாம்சத்தின் கிரியையாகும்.

> **கிறிஸ்துவின் ஜீவனால் பிறக்கும் மார்க்கமே கிறிஸ்துமார்க்கம்! அவர் ஆவியால் நடந்தேறும் ஊழியமே தேவ ஊழியம்! நாமே நடத்திக் கொள்ளுகிற வழி நமது மார்க்கம். நாமே செய்து கொள்ளுகிற ஊழியம் மனுஷீக ஊழியம்!**

இதை உணராமல், நமது காலத்தையும் பிரயாசத்தையும் எவ்வளவோ நஷ்டப்படுத்தியிருக்கிறோம். உலகத்துக்குக்கடுத்த காரியங்களில் நமது பேச்சு, விண்ணப்பம், வேலைகளை, நமது சுயபலத்தால், சுயபுத்தியால் நடப்பிக்கும்போது அவைகளில் சித்தி பெற்றாலும் பெறலாம். ஆனால், **தேவ காரியத்தில் நமது சாமர்த்தியமும் முயற்சிகளும் பலிக்காது.** ஏனென்றால் கனிகள், கொடிகளின் பிரயாசத்தால் உண்டாகாமல், செடியின் பிரயாசத்தால் உண்டாகின்றன. **கொடிகள் செடியில் நிலைத்திருக்க, செடி கொடிகளை கனி கொடுக்கச் செய்கிறது.** அநேகர் இதைக் கவனிக்கிறதில்லை. கிறிஸ்துவில் நிலைத்திருப்பதின் அவசியத்தையும், அதனால் உண்டாகும் நிலையுள்ள ஆசீர்வாதத்தையும் உணர்வதும் இல்லை! ஆண்டவர் சொன்ன, திராட்சை செடியின் முக்கியமான போதனையை அவர்கள் ஏற்றுக்கொள்ளுகிறதில்லை!

> **அமர்ந்த ஆழமான ஜீவனுக்கேதுவான "ஐக்கிய ஜீவியம்" அவர்களுக்குப் பிரியமில்லை. ஏனென்றால் அந்த மறைவான ஜீவியத்தில் அவர்களுக்கு உற்சாகமில்லை. இதைக்கொண்டு, மனுஷரால் புகழ்ச்சி கிடைப்பதில்லையே!**

ஆகையால், ஓடவேணும் சாடவேணும்; படிக்க வேணும் நடிக்க வேணும்; பேச வேணும் ஜெபிக்க வேணும்; பலவிடங்களிலும் கூட்டங்களை வைக்க வேணும்; ஆராதனைகளை வழக்கம்போல் நடத்தவேணும்; ஆலோசிக்க வேண்டும்; ஒழுங்குகளை ஏற்படுத்த வேணும்; ஒழுங்குப்படி சகல முயற்சிகளும் நன்றாய் நடக்க வேணும்; நாமே அவைகளை நடத்திக்கொள்ள வேணும்; நாமே நம்மை புகழ்ந்துகொள்ள வேணும்; நாமே சந்தோஷப்பட்டுக் கொள்ள வேணும்! நாம் விரும்பினபடி காரியங்கள் நடவாமற்போனால் துக்கப்பட்டுக்கொள்ளவேணும். எல்லாம் நமது யோசனையும், நமது முயற்சியும், நமது வேலையும், நமது கொண்டாட்டமுமாகவே இருக்கின்றன!

இப்படியெல்லாம் செய்தால்தான் வேலை நடந்ததுபோல

'நமக்கு' ஆறுதலுண்டாகும். இப்படிச் சொல்லும்போது, ஜெபத்துக்கும் தேவ ஊழியத்துக்கும் விரோதமாகப் பேசுவதாக நினைக்க வேண்டாம். நாம் கிறிஸ்துவில் நிலைத்திருந்து, அவர் ஆவியினால் ஏவப்பட்டுச் செய்யாத சகல காரியங்களும் வீணாய் போகும் அல்லவோ?

**மனுஷர் நமது முயற்சிகளை மெச்சிக்கொள்ளலாம். மனுஷர் தயவால் நமது காரியங்கள் அநுகூலமடையலாம். ஆனால் மாம்சத்தின் சம்பிரதாயம் யாவும் தேவனுக்கு முன்பாக அருவருப்பாகயிருக்கிறது. நமது உண்மையற்ற சத்தத்தையும் பேச்சையும் அவர் வெறுக்கிறார். நாம் கிறிஸ்துவில் நிலைத்திராமல் செய்கிற காரியங்கள் உண்மையற்றவைகளே!**

அவைகளால் தேவனுக்கு ஒருபோதும் மகிமை வருவதில்லை. தேவ ஊழியராகிய நாம் இதைக்கொஞ்சம் கவனிப்பது நல்லது. "கொடியானது திராட்சை செடியில் நிலைத்திராவிட்டால் அது தானாய் கனிகொடுக்கமாட்டாததுபோல, **நீங்களும் என்னில் நிலைத்திராவிட்டால் கனிகொடுக்க மாட்டீர்கள்**" என்று எஜமான் சொன்ன வார்த்தையை யார் தள்ளக்கூடும்? மற்ற வேலைக்காரர் தங்கள் வேலைகளைச் செய்வதுபோல், கிறிஸ்துவின் ஊழியரும் செய்யத் துணிவது எவ்வளவு மோசம்! மனுஷனுடைய சுய முயற்சிகள் ஒருக்காலும் கனிகளாகாது! **அப்படிப்பட்டவர்கள் தங்கள் வேலையை நிறுத்தி,** அவரில் நிலைத்திருக்கும் இரகசியத்தை, ஆண்டவரிடம் சென்று கற்றுக்கொண்டால் நலமாயிருக்கும்!

கொடியின் வேலையெல்லாம் ஒன்றே ஒன்றுதான்: அது செடியைப் பூரணமாகச் சார்ந்து பிழைக்கிறது! தனக்குக் கிடைக்க வேண்டிய சாரத்தைக் குறித்து அது கவலைப்படுகிறதில்லை. தான் வளர வேண்டுமே என்று கலங்குவதில்லை. தான் கனிகொடுக்க வேண்டுமே என்று பிரயாசப்படுவதில்லை. **அந்த கவலை யாவும் செடிக்குரியது!** செடியானது தன் வேர்களை அங்குமிங்கும் அனுப்பி, சாரத்தையும் உரத்தையும் உட்கொண்டு கொடிகளுக்கு அனுப்ப, அக்கொடிகள் தாங்கள் பெற்றுக்கொண்ட சாரத்தால் வளர்ந்து கனிகொடுக்கின்றன. நாம் கிறிஸ்துவால் பிழைப்பதும் கனி கொடுப்பதும் இதுபோலவே! தேவனுடைய சகல பரிபூரணமும் அவருக்குள் நிறைந்திருக்கிறதென்றும் 'அவருக்குள்' நீங்கள் பரிபூரணமுள்ளவர்களாயிருக்கிறீர்கள் என்றும் அப்போஸ்தலன் சொன்ன **ஐக்கியத்தின் இரகசியம்** இதுதான்! நாம் கிறிஸ்துவில் பூரணமாய் சார்ந்திருக்கும்போது அவருடைய ஜீவனாகிய ஆவி நமக்குள் வந்துபெருக, நாம் ஆசீர்வதிக்கப்படுகிறோம். கொடியில் சாரம்

இடைவிடாமல் ஏறிக்கொண்டிருப்பதுபோல, கிறிஸ்துவின் ஜீவன் இடைவிடாமல் நமக்குக் கிடைக்கிறது. நாம் அவரைவிட்டுப் பிரிந்துவிட்டால், அவரது ஜீவன் நின்றுவிடும்! கொடி சிலநாட்கள் நிலைத்திருந்து, அப்புறம் பிரிந்துபோகிறதில்லை! எக்காலமும் நிலைத்திருந்து, இடைவிடாமல் ஜீவனைப்பெற்று வளருகிறது. 'கிறிஸ்து நமக்கு ஜீவன்' என்பதும், நாம் அவராலே பிழைக்க வேண்டுமென்பதும் மெய்யானால், நாம் இடைவிடாமல் அவரில் நிலைத்திருக்க வேண்டுமென்பது நியாயமே. அப்படியிருக்க ஞாயிற்றுக் கிழமையிலும், பண்டிகை நாட்களிலும், விசேஷித்த காலங்களிலும் மாத்திரம் நம்மில் காணப்படும் உற்சாகத்தைக் குறித்து என்ன சொல்லுவது?! ஆம், அவரில் நிலைத்திராத கொடிகளுக்கு ஜீவனேது? அது காலப்போக்கில், கருகி விழுந்துவிடும்!

– பரமானந்தம் ஐயர்

---

## தனக்குப் பிரியமானவர்களிடம் இடைபடும் தேவன்!

இயேசு நடந்ததுபோலவே, நீங்களும் நடந்துவர தேவன் உங்களை அழைத்திருக்கிறாரா? அப்படியானால் குருவைப்போலவே, **சிலுவையில் அறையப்படும்** வாழ்விற்குள்ளும், இழிவான தாழ்மையின் பாதைக்குள்ளும் நடத்திச் செல்வார்! மற்ற கிறிஸ்தவர்களைப்போல் உங்களையும் 'சொகுசாய்' இருந்திடச் செய்யாமல், நீங்களோ கீழ்ப்படியும்படி அனேக காரியங்களை உங்கள் முன் வைப்பார்! உங்கள் வாழ்வில் விசேஷமாய் **உரிமையோடு இடைப்பட்டு**, மற்ற கிறிஸ்தவ ஜனங்கள் செய்யும் புகழ்தருவிக்கும் கிரியைகளை, நீங்கள் செய்வதற்கோ அனுமதிக்கமாட்டார்!

மற்றவர்கள், கனப்படுத்தப்படுவதற்கும் முன்னேறிச் செல்வதற்கும் அனுமதித்துவிட்டு, உங்களையோ **ஒளிப்பிடத்தில்** மறைத்துக் கொள்வார்! ஏனெனில், இம்மறைவான நிழலில்தான் அவர் தனக்குப் பிடித்தமான சுகந்த மணம் வீசும் நற்கனியை உங்களில் உருவாக்க விரும்புகிறார்!

இந்த நல்ல ஆண்டவர் உங்கள் சக கிறிஸ்தவர்களை தாராளமாய் மேன்மை அடையச் செய்துவிட்டு, உங்களையோ 'சிறுமையின்' சிங்காரத்தில் வைத்திடுவார்! மனுஷர் கனத்திற்காகவே ஓடியாடி ஊழியம் செய்பவர்கள், மிக எளிதாக அந்த நன்மதிப்பைத் தட்டிச் செல்ல அனுமதிப்பார்.

**உங்களையோ, நீங்கள் எவ்வளவு செய்திருக்கிறீர்கள் என 'அறியாமலே உழைத்து' உழைத்து பிரயாசப்படச் செய்திடுவார்!**

*இருப்பினும் முடிவில், உங்கள் பிரயாசத்தையே "அதி அருமையானதாய்" தேவன் பரிமளிக்கச் செய்வார்!...... அந்த கிரியைக்குரிய 'நன் மதிப்பையோ' மற்றவர்கள் தட்டிப்பறித்திடச் செய்வார்! ஆகிலும், இதுவே இயேசு வரும்போது உங்கள் பிரதிபலனை பத்துமடங்காக கூட்டி வழங்கிட வகை செய்திடும்!*

*அற்பமான சில வார்த்தைகளுக்காவும், சிந்தித்தவைகளுக் காகவும், அல்லது நீங்கள் சிறிது நேரத்தை வீணாக்கியதற்காகவும்..... உங்களைக் கருத்தாய் கண்காணிக்கும் பரிசுத்தாவியானவர், தன் அன்பின் வைராக்கியத்தின் மிகுதியினிமித்தம் உங்களைப் பகிரங்கமாய் கடிந்துகொள்வார்! முழு இருதயமற்ற மற்ற கிறிஸ்தவர்களோ, இவ்வித அற்ப சொற்ப காரியங்களில் சேற்றில் விழுவதைக் குறித்து ஆவியானவர் அலட்டிக்கொள்ளவே மாட்டார்!*

**நீங்களோ "சகலத்தையும் செம்மையாய் அரசாளும் சர்வ வல்ல தேவனவர்" என்பதில் மாத்திரம் மனநிறைவு கண்டீர்கள்..... அதுபோதும்!**

*அவர் தனக்குச் சொந்தமானோரிடத்தில் மாத்திரமே தான் விரும்புகிற எதையும் செய்ய உரிமையுள்ளவர் என்பதையும், அவ்விதம் அவர் உங்களிடம் ஈடுபடும் ஓராயிரமான விஷயங்கள் குறித்து உங்கள் காரணபுத்தியில் கேள்விகள் பல எழும்பினாலும், அவைகளுக்கு அவர் விளக்கம் தரமாட்டார் என்பதையும் நீங்கள் அறிந்திருக்கிறீர்கள்!*

*இவ்வாறு தேவனுக்கென "விசேஷித்த ஜனமாய்" மாற உங்களுக்கு விருப்பம் உண்டா? எல்லாம் உங்களைப் பொறுத்துதான்! முழுவதுமாய், உங்களை ஓர் அடிமையாக அவருக்கு விற்றுப் போடுங்கள். அப்படி நீங்கள் செய்துவிட்டால், உடனே அவர் தன் வைராக்கியமான அன்பினால் உங்களை வாரி எடுத்துக்கொள்வார்! பின்பு, மற்றவர்கள் பேசி, செய்திட அனுமதிக்கும் எண்ணற்ற காரியங்களை நீங்கள் பேசிவிடவோ அல்லது செய்திடவோ நம் 'அன்பர்' அனுமதிக்கவே மாட்டார்!*

*இவ்விதமாய் ஜீவனுள்ள தேவனால் நீங்கள் ஆட்கொள்ளப்பட்டு, உங்கள் வாழ்வில் பரிசுத்தாவியானவர் நேருக்கு நேராகவும், தனிப்பட்ட விதத்திலும்..... ஏன், வினோதமாகவும் வைராக்கிய பாதுகாவல் புரிந்து நடத்துவதற்காக, உங்கள் இருதயத்தின் அந்தரங்கத்திற்குள் மகிழ்ந்து களிகூர்ந்திட முடிகிறதா? என்பதைப் பாருங்கள்! அப்படியானால், உங்களுக்கு மேலாய் "பரலோகத்தின் பலகணி" திறந்து 'வான் மழையென' தேவ ஆசீர்வாதம் உங்கள் நெஞ்சத்தில் நிறைவதை நீங்கள் ருசிப்பது நிச்சயம்! நிச்சயமே!!*

*– கிறிஸ்ட்ஸிலேவ்*

# லூயிஸ் ஜேமி,

## 'கிறிஸ்துவின் அன்பிற்காய்' ஆதிவாசிகளால் கொல்லப்பட்டவர்!



(AD 1740-1775)

ஸ்பெயின் நாட்டில் பிறந்த லூயிஸ் ஜேமி கத்தோலிக்க பள்ளியில் படித்து முடித்தார். 1760-ம் ஆண்டு சாந்தா மரியா கான்வெண்டில் ஓராண்டு கத்தோலிக்க பாதிரியார் பயிற்சி பெற்றார். பின்பு அதே வேத கல்லூரியில் இறையியல் கல்வி கற்பிக்கும் ஆசிரியராய் மாறினார். 1764-ம் ஆண்டு கத்தோலிக்க பாதிரியாராய் நியமனம் செய்யப்பட்டார். பின்பு ஷேன் பெர்னான்டோ மிஷனெரி கல்லூரியில் "சிலுவையின் வீரர்கள்" என்ற தலைப்பில் பயிற்சி பள்ளி நடத்தினார். அங்கு, கர்த்தருடைய ஊழியத்தில் தனிமைப்படுத்தப்படுவது குறித்தும், நெருக்கமான சூழ்நிலைகள் குறித்தும், சுயத்திற்கு மரிப்பது குறித்தும், மிஷனெரி பணி "ஓர் போர் முனையில் நிற்க வேண்டிய" பணி எனவும் பாடங்கள் நடத்தினார்.

அதன் பிற்கு ஷன் – டியாகோ மிஷன் பணிகளுக்கு ஜேமி அனுப்பப்பட்டார். அவர் சென்ற இடத்தில 'கும்மியாய்' என்ற பழங்குடியினர் வசித்து வந்தார்கள். அவர்களுக்கு ஊழியம் செய்யும் பணியில், அந்த பழங்குடியினர் பேசும் மொழிகளை நன்கு கற்றுக் கொண்டார். அவர் தங்கிய ஸ்தலத்தில் போதுமான தண்ணீர் வசதி இல்லாதபடியால், தன் மிஷன் பணியை வேறு ஸ்தலத்திலிருந்து செய்திட முயற்சி எடுத்தார். அந்த சமயத்தில் ஏராளமான கும்மியாய் மக்கள் மனந்திரும்பி மாற்றமடைந்தனர்! மாற்றமடைந்தவர்கள் சுமார் 431 பேர்கள் இருந்தார்கள்! திரளான மக்கள் மனந்திரும்பியதைக் கண்ட கும்மியாய் பழங்குடியினர் ஆத்திரமடைந்தார்கள். தங்கள் மீது 'ஸ்பானிஷ் நாட்டவர்' தாக்குதல் நடத்துவதாக பொய் குற்றம் சாட்டினர். இந்நிலையில், அதிகாலை 1:30 மணி அளவில், முழு நிலவு ஒளியில், 1875-ம் ஆண்டு நவம்பர் 4-ம் தேதி சுமார் 600 கும்மியாய் வீரர்கள் சத்தமேதுமில்லாமல், மெதுவாக மிஷன் காம்பவுண்டுக்குள் நுழைந்து விட்டார்கள். அங்கு, ஆலயத்திலிருந்த அனைத்து பொருட்களையும் உடைத்தார்கள். விழித்துக் கொண்ட இரண்டு மிஷனெரிமார்களும், **தங்கள் அடைக்கலத்திற்காக ஓடாமல் இந்த கொலைகார கும்பலை நோக்கிச் சென்றார்கள்.** அவர்களைப் பார்த்து "அன்பார்ந்த பிள்ளைகளே கர்த்தரை நேசியுங்கள், கர்த்தர் உங்களை நேசிக்கிறார்" என அன்போடு வாழ்த்துக்கள் கூறினார்கள். ஆனால், அந்த கும்மியாய் ஜனங்களோ, அவரை வெறிகொண்டு பிடித்து லூயிஸ் ஜேமியின் ஆடைகளை கிழித்துப் போட்டு, 18 அம்புகளை அவர் மீது பாய்ச்சினார்கள். பின்பு அவருடைய முகத்தையும் தலையையும் கற்களாலும் தடிகளாலும் அடித்து சின்னா பின்னமாக்கினார்கள். கிறிஸ்துவின் அன்பிற்குச் சின்னமாய் விளங்கிய லூயிஸ் ஜேமி ஆல்ட்டா- கலிபோர்னியாவின் முதல் கத்தோலிக்க இரத்த சாட்சியாய் அழைக்கப்படுகிறார்!

*- கிறிஸ்துவின் பலிபீட சாட்சிகள்*

## கல்லான இருதயங்களை உடைத்து, இரட்சிப்பருளும் கர்த்தர்!

சீன தேசத்து நியூச் வாங்கிலுள்ள ஒரு திருச்சபை, சுவிசேஷத்தை ஏற்றுக்கொள்ள மனமில்லாது கடினப்பட்டிருந்தமையால் எந்த நன்மையும் அச்சபையிலிருந்து என்றும் வரப்போவதில்லை என, அங்குள்ள கிறிஸ்தவர்கள் எண்ணினார்கள். அந்த சபையைக் குறித்து எல்லோரும் தீதாகவே பேசினார்கள். சற்று அருகிலுள்ள லியாங்கில் ஏற்பட்ட எழுப்புதல் இங்குள்ள சபையில் ஏற்படும் என்று எதிர்பார்ப்பது முற்றும் தவறு எனவும் மக்கள் பேசிக்கொண்டனர். இதைக் கேள்விப் பட்ட சீன தேச மிஷனெரி கோபோர்த் "நீங்கள் தேவனது வல்லமையை பல இடங்களிலும் கண்டிருக்கிறீர்கள். எனவே, மிகுந்த நம்பிக்கையுடன் தேவன் இந்த சபையிலும் இரக்கம் காட்டும்படியாக மன்றாடி ஜெபியுங்கள்" என்று தன் சொந்த சபையினரிடம் கூறிவிட்டு, நியூச் வாங்க் சபைக்கு பிரசங்கம் செய்திட புறப்பட்டார்!

சர்வ வல்லவரால் கூட நொறுக்கப்படக்கூடாத கல்லான கடின சபை என்று கருதப்பட்ட அந்த நியூச்வாங் சபையின் தேவாலய பிரசங்க பீடத்தில் கோபோர்த் பெருமூச்சோடு ஏறினார். சபையினருக்கு முதல் பாடல் கீதத்தை அறிவிக்குமுன்னர் கோபோர்த் தலை கவிழ்ந்து மௌனமாக, தனக்குள்ளேயே ஜெபித்தார். கண்கள் குளமாகி, கண்ணீர் வடித்தார்! பின்னர் அவர் தலைநிமிர்ந்து பார்த்தபோது ஆண்களும், பெண்களும், குழந்தைகளும் தங்களது பாவ அக்கிரமங்களின் கொடுமையை உணர்ந்தவர்களாய் தேவனது நியாயாசனத்தின் முன்பாக மனமுடைந்தோராய் கண்ணீர் வடித்து "பலவிதமான பாவங்களை அறிக்கைசெய்து" நொறுங்குண்ட இருதயத்தோடு ஜெபிக்கும் காட்சியை கோபோர்த்தின் கண்கள் கண்டன. ஒரு சிறு பிரசங்கமும் அவர் செய்யவில்லை. ஒரு கீதமும் கூட்டத்தில் பாடப்பட வில்லை. **ஏன், வாய் திறந்து ஒரு சிறு ஜெபம் கூட செய்யப்படவில்லை. அதற்குள் அச்சபையின் கல்லான கடின இருதயம், தேவனின் வல்ல சமூகத்திற்கு முன்பாக மெழுகாக உருகிற்று.** ஆம் இந்த மகத்தான வெற்றி, வல்லமையான நம் கர்த்தரின் "இரட்சிப்பின்" பராக்கிரமத்தாலேயே நிகழ்ந்தது!

- *சுவிசேஷ மலர்*

பரலோக பொக்கிஷங்கள்
Published and Owned by MADURAI CHRISTIAN FELLOWSHIP, a Regd Society.
Printed by SFA Print (P) Ltd., Sivakasi. Editor T.Rathnakumar, Madurai.